# பிப்.14-இல் பிரதமர் மோடி தமிழகம் வருகை

சென்னை, ஜன. 31: பிரதமர் நரேந்திர மோடி, வரும் 14-ஆம் தேதி தமிழகம் வருகை தர இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் தில்லி சென்ற முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரைச் சந்தித்தார்.

அப்போது, தமிழக மக்களின் நலன்களுக்காக கோரிக்கை வைத்ததாகவும், நிறைவு பெற்ற மெட்ரோ ரயில் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைக்க வருமாறு பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுத்ததாகவும், அழைப்பை பிரதமர் ஏற்றதாகவும் முதல்வர் பழனிசாமி கூறியிருந்தார்.

இந்நிலையில், பிப்.14-ஆம் தேதி பிரதமர் மோடி தமிழகம் வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அவரின் தமிழகப் பயணத்தின்போது வண்ணாரப்பேட்டை - திருவொற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்கி வைப்பதோடு, காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டத்துக்கும் அடிக்கல் நாட்டுவார் எனத் தெரிகிறது.



கரோனா பொதுமுடக்கத்துக்குப் பிறகு பிரதமர் மோடி முதல் முறையாக தமிழகம் வருகிறார். அதே நேரத்தில், தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், பிரதமர் மோடியின் தமிழக வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.